SHANKAR IAS ACADEMY™

THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

# தமிழகத் தலைவர்கள் வரிசை

(TNPSC தேர்வு Unit - 8 மற்றும் Unit - 9 உடன் தொடர்புடையது)



# எம்.ஜி. இராமச்சந்திரன்

SHANKAR IAS ACADEMY

AP-2241, 2nd Floor, 12th Main Road,

Anna Nagar, Chennai - 600 040. Tamil Nadu.

www.shankariasacademy.com

Email : tnpscfeedback@shankarias.in

# தமிழகத் தலைவர்கள் வரிசை

## 8. எம்.ஜி. இராமச்சந்திரன்

### இளம் பருவம்

- மருதூர் கோபாலன் இராமச்சந்திரன் (MGR) அவர்கள் 1917 ஜனவரி 17 இல் இலங்கையில் உள்ள **கண்டியில்** பிறந்தார்.
- இவரின் பெற்றோர்: கோபால மேனன் – சத்யபாமா.
    - பெற்றோர் இந்தியாவைச் சார்ந்தவர்கள்.
- இவரின் குடும்பத்தினர் 1923 இல் கும்பகோணத்திற்கு இடம் பெயர்ந்தனர்.
- இவர் இளம் வயதிலேயே பல்வேறு மேடை நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். பின்னர் **சதிலீலாவதி** (1936) என்னும் திரைப்படம் மூலம் சினிமாவில் அறிமுகமானார். பின்னர் பல திரைப்படங்களில் நடித்து புகழ் பெற்றார்.

### பொது வாழ்க்கை

- 1953 இல் இவர் திமுக வில் இணைந்தார்.
    - 1962 இல் சட்ட மேலவை உறுப்பினர் ஆனார்.
    - 1967 மற்றும் 1971 இல் சட்டப் பேரவை உறுப்பினர் ஆனார்.
- 1971 – ஆம் ஆண்டிற்கான சிறந்த நடிகர் விருது (**தேசிய விருது**) ரிக்சாக் காரன் என்னும் படத்திற்காக எம்.ஜி. ராமச்சந்திரனுக்கு வழங்கப்பட்டது.
- எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 1972 அக்டோபர் 17-இல் **அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்** என்னும் ஒரு புதிய கட்சியை தொடங்கினார்.
- இவரின் கட்சியானது 1973 இல் நடைபெற்ற **திண்டுக்கல்** நாடாளுமன்ற இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றது.
- அதிமுகவின் அடிப்படைக் கொள்கைகள் **‘அண்ணாயிசம்’** என்று இவர் 1974 இல் அறிவித்தார்.

SHANKAR IAS ACADEMY

- அண்ணாயிசம் என்பது **வறுமை ஒழிப்பு** மற்றும் **தீண்டாமை ஒழிப்பு** ஆகியவற்றை முதன்மையாகக் கொண்டது என இவர் அறிவித்தார்.
- மேலும் இக்கட்சியின் கொள்கைகளாக **சுயமரியாதை, பகுத்தறிவு, சமத்துவம், சமூக சேவை** ஆகியவற்றை அறிவித்தார்.

➢ இவரின் கட்சி அதிமுக ஆனது 1974 ஆம் ஆண்டு புதுச்சேரி சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

- முதலமைச்சர் - **எஸ். ராமசாமி.**

➢ 1976 இல் இவர் தனது கட்சியான அதிமுகவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் **(அஇஅதிமுக)** என மாற்றினார்.

## ஆட்சியின் சாதனைகள்

➢ 1977 இல் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற இவர் தலைமையிலான கட்சி ஆட்சியைப் பிடித்தது. தமிழகத்தின் முதலமைச்சராக **1977 ஜூன் 30** இல் முதன்முறையாக பதவி ஏற்றார்.

- 1977 – முதலாவது முறை ஆட்சியமைத்தல்
- 1980 – இரண்டாவது முறை ஆட்சியமைத்தல்
- 1985 – மூன்றாவது முறை ஆட்சியமைத்தல்

➢ இந்தியாவில் ஒரு திரைப்பட நடிகராக இருந்து முதன்முதலில் முதலமைச்சராக ஆனவர் எம்.ஜி. இராமச்சந்திரன் ஆவார்.

➢ இவர் ஆட்சியின் பொழுது (1978) 10+2+3 என்ற கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

- **இலட்சுமணசாமி முதலியார் குழுவின்** பரிந்துரையின்படி புதுமுக வகுப்பு முறை (Pre – University Course) நீக்கம் செய்யப்பட்டது.

➢ 1978 இல் அண்ணா தொழில் நுட்பக் பல்கலைக்கழகச் சட்டத்தை இவர் நிறைவேற்றினார்.

- இவர் 1978 செப்டம்பர் 4 இல் அண்ணா பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தினார்.

SHANKAR IAS ACADEMY

- இவர் **“தெலுங்கு கங்கைத் திட்டத்தை”** ஆந்திரப் பிரதேச அரசுடன் செய்து கொண்டார். இது 1983 இல் நடைமுறைக்கு வந்தது.
    - ஆந்திராவின் கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்கு ஆற்று நீரைக் கொண்டு வரும் **குடிநீர்த் திட்டம்** ஆகும்.
- இவர் ஆட்சியின் பொழுது **பெரியார் நூற்றாண்டு விழா** 1978 செப்டம்பர் 18, 19 ஆகிய நாட்களில் ஈரோடு நகரில் கொண்டாடப்பட்டது.
    - கோவை மாவட்டத்தில் இருந்து ஈரோடு நகரை தலைநகரமாகக் கொண்டு **“பெரியார் மாவட்டம்”** உருவாக்கப்பட்டது.
    - பெரியாரின் **தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்** நடைமுறைப்படுத்தப்பட்டது.
    - தமிழகம் முழுவதும் உள்ள **வீதிகளின் பெயர்களிலுள்ள சாதிப் பெயர்களை** இவர் நீக்கினார்.
    - தமிழகத்தின் முக்கிய நகரங்களில் பெரியார் நினைவாக **‘பகுத்தறிவுச் சுடர்’** நிறுவப்பட்டது.
- காமராசரின் வசிப்பிடமாக இருந்த **தியாகராய நகர் திருமலை பிள்ளை சாலையில்** உள்ள இல்லத்தை இவர் 1978 இல் நினைவு இல்லமாக மாற்றினார்.
- 1979 இல் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் உள்ளவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் **ரூ.9,000 க்கும் குறைவாக இருந்தால் மட்டுமே இடஒதுக்கீடு** சலுகை பெற முடியும் என்ற ஆணையை பிறப்பித்தார்.
    - இது சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆதலால் ஆணையை திரும்ப பெற்ற இவர் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை 31% இல் இருந்து 50% ஆக உயர்த்தினார்.
- இவர் 1980 ஆம் ஆண்டு பகுதி நேர கிராம அதிகாரி பதவிகளான **கர்ணம், மணியம்** போன்ற பதவிகளை ஒழித்தார்.
    - 1973 இல் கிராம சீர்திருத்தம் தொடர்பாக அமைக்கப்பட்ட **வர்கீஸ் குழு** மற்றும் **அம்புரோஸ் குழு** ஆகியவற்றின் அறிக்கைகளின் அடிப்படையில் இந்த பதவிகள் ஒழிக்கப்பட்டது.
    - இதற்கு பதிலாக 1982 இல் **கிராம நிர்வாக அலுவலர் (VAO)** என்னும் பதவி உருவாக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

- பின்னர் இப்பதவிக்கான தகுதியானவர்கள் TNPSC மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

➢ இவர் ஆட்சியின் பொழுது (1981) மதுரையில் **5-வது உலகத் தமிழ் மாநாடு** நடத்தப்பட்டது.

➢ 1982 ஆம் ஆண்டு **குண்டாஸ் சட்டம்** (Goondas Act) என்னும் சட்டத்தை தமிழகத்தில் இவர் கொண்டு வந்தார்.

- ஒருவர் சட்டத்தை மீறி செயல்படக் கூடும் என்று மாவட்ட ஆட்சியர் சந்தேகப்படும் பொழுது அந்த நபர் எந்த விசாரணையும் இன்றி ஒரு வருடம் சிறையில் அடைக்கப்படுவார்.

➢ இவர் **1982 ஜூலை 1** இல் மதிய உணவுத் திட்டத்தை சத்துணவுத் திட்டமாக மேம்படுத்தினார். இத்திட்டமானது **"முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்"** என அழைக்கப்பட்டது.

- இத்திட்டமானது எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால் **திருச்சி மாவட்டம் பாப்பாகுறிச்சி கிராமத்தில்** தொடங்கி வைக்கப்பட்டது.
- இத்திட்டமானது **1982 செப்டம்பர் 15** இல் (அண்ணா பிறந்த தினம்) நகரப் பகுதிகளுக்கு விரிவுப்படுத்தப்பட்டது.

| மதிய உணவுத் திட்டம் | |
|---|---|
| 1918 | **குறிச்சி ரங்கசுவாமி அய்யங்கார்** அவர்கள் இந்து தியோலாஜிக்கல் பள்ளியில் மாணவர்களுக்காக மதிய உணவுத் திட்டத்தை தொடங்கினார். (தனியார் திட்டம்) |
| 1920 | தியாகராய செட்டி அவர்கள் சென்னை மேயராக இருந்த பொழுது ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில் நீதிக் கட்சியைச் சேர்ந்த **சுந்தர்ராவ் நாயுடு** அவர்களால் இலவச உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. (அரசுத் திட்டம்) |
| 1956 | **காமராசர்** அவர்களால் தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகமானது. |

SHANKAR IAS ACADEMY

- இவர் 1982 இல் **மகாராஜன் குழுவை** (Maharajan Committee) அமைத்தார்.
    - இக்குழுவானது அனைத்து வகுப்பினரும் (All Caste) முறையான பயிற்சி பெற்ற பின்னர் கோயில்களில் அர்ச்சகர் ஆக நியமனம் செய்யலாம் என பரிந்துரைத்தது.
- இவர் ஆட்சியின் பொழுது (1984) இல் பொறியியல், மருத்துவம் ஆகிய படிப்புகளில் சேர்வதற்கு நடைபெற்று வந்த **நேர்முகத் தேர்வு** நீக்கப்பட்டு அதற்கு பதிலாக **நுழைவுத் தேர்வு முறை** அறிமுகப்படுத்தப்பட்டது.
- இவரின் ஆட்சியின் பொழுது (1984) **அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்** ஆனது ஏற்படுத்தப்பட்டது.
    - இதற்கான அடிக்கல்லை நாட்டியவர் **அன்னை தெரசா.**
    - தமிழக அரசின் **ஒரே மகளிர் பல்கலைக்கழகம்** இதுவே ஆகும்.
    - இது **அட்டுவம் பட்டியில்** (கொடைக்கானல்) அமைந்துள்ளது.
    - இது **'தமிழ்நாடு அரசுச் சட்டம் 15'** இன் கீழ் உருவாக்கப்பட்டது.
- இவர் ஆட்சியில் உருவான பிற பல்கலைக்கழகங்கள்:
    - தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் (1981)
    - பாரதியார் பல்கலைக்கழகம், கோவை (1982)
    - பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி (1982)
    - அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி (1985)
- பொங்கல் திருநாளை பொருட்டு **இலவச வேட்டி – சேலை** வழங்கும் திட்டத்தை இவர் அறிமுகப்படுத்தினார்.
- இவர் ஆட்சியின் பொழுது **1986 நவம்பர் 1** இல் தமிழக சட்ட மேலவை நீக்கப்பட்டது.
    - சட்ட மேலவையின் (கடைசி) தலைவர்: ம.பொ. சிவஞானம்
- இவர் பெண்களுக்கான சிறப்பு பேருந்தை அறிமுகப்படுத்தினார்.
- **சென்னைப் பல்கலைக்கழகம்** மற்றும் அரிசோனாவில் உள்ள **உலகப் பல்கலைக்கழகம்** ஆகியவை இவருக்கு **கௌரவ டாக்டர் பட்டத்தை** (Honorary Doctorate) அளித்தன.
- இவர் தொடங்கிய இதழ்கள்:

SHANKAR IAS ACADEMY

- தாய் (வார இதழ்)
- அண்ணா (நாளிதழ்)

➢ இவருக்கு தலைவர்கள் அளித்த சிறப்புப் பெயர்கள்

- இதயக்கனி (அண்ணா)
- மக்கள் திலகம் (லேனா தமிழ்வாணன்)
- பொன்மனச் செம்மல் (கிருபானந்த வாரியார்)
- புரட்சி நடிகர் (மு. கருணாநிதி)
- புரட்சித் தலைவர் (கே.ஏ. கிருஷ்ணசாமி)

➢ இவர் எழுதிய சுயசரிதை நூல் - **நான் ஏன் பிறந்தேன்.**

➢ இவர் 1987 டிசம்பர் 24 இல் இயற்கை எய்தினார்.

➢ 1988 இல் இவருக்கு **பாரத ரத்னா விருது** (மறைவிற்கு பிறகு) வழங்கப்பட்டது.

* * * * * * * *

SHANKAR IAS ACADEMY